தலைப்பு 285 – விவசாயத் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 285 - விவசாயத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் விவசாயத் ̇ திணைக்களத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 20 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து விவசாயத் ̇ திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக் கூற்றுக்கள் அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக் கூற்றுக்கள் வேறு

நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக் கூடும். எனது அறிக்கை விவசாயத் திணைக்களத்தினதும் பாராளுமன்றத்தின் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப் பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் விவசாயத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வர்த்தக முற்பணக் கணக்கு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்த ரூபா 961,980 ஆன 14 கடன்பட்டோர் மீதிகள் அறவிடப்பட வேண்டிய மீதிகளாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக.	கடன் அறவீடு சரியாக கணக்குகளில் பதிவு செய்யப்பட்டு சரியான கடன்பட்டோர் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும்.

(ii)	கண்டி பிரதி விவசாய பணிப்பாளர் அலுவலத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 175,000 ஆன கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை.	தாமதம் காரணமாக பதிவு செய்ய முடியாதிருந்ததுடன் 2025 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக.	சரியாக கடன்பட்டோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(iii)	05 விதை உற்பத்தி பண்ணைகளுக்குரிய 540 நிலையான சொத்துக்களின் பெறுமதி அடையாளம் காணப்படவில்லை, அத்துடன் சொத்துக்களின் பெறுமதி மற்றும் தேய்மானம் என்பன மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படவில்லை.	பெறுமதியை இனங்காணாத இந்த நிலையான சொத்துக்களின் பெறுமதியை சரியாக அடையாளம் கண்டு 2025 ஆம் ஆண்டில் பெறுமானத் தேய்மானத்தை சரிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக.	சொத்துக்களின் பெறுமதி சரியாக அடையாளம் காணப்பதற்கும் பெறுமானத் தேய்மான பெறுமதியை சரியாகக் கணக்கிட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(iv)	சீதாஎலிய விதை உற்பத்தி பண்ணையில் மீளாய்வாண்டிற்கான வளரும் பயிர் செய்கை செலவைக் கணக்கிடும் போது, ரூபா 3,192,170 செலவுகளைச் சேர்க்காததன் காரணமாக அந்த ஆண்டிற்கான இலாபம் அந்தத் தொகையால் அதிகரித்திருந்தது.	இங்கு பெறுகை நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், 2024.12.31 இல் உள்ளவாறு அந்த பெறுமதியுடன் தொடர்புடைய எந்த வவுச்சர்களும் சமர்ப்பிக்கப்படாததால், அந்த பெறுமதி 2024.12.31 ஆந் திகதியில் உள்ள பயிர் செய்கையின் கிரயத்தில் உள்ளட்க்கப் படவில்லை என்பதாக.	பயிர்செய்கையின் கிரயத்தை சரியாக அடையாளம் கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(v)	விவசாய பண்ணை பராமரிப்பு மற்றும் விதை விற்பனை முற்பணக் கணக்கிற்கு உரியதல்லாத சேர்க்கப்படாத ரூபா. 23,502,852 வருமானம், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வருமானத்தின் கீழ் காண்பிக்கபட்டிருந்தது.	ஏல வருமானம் மற்றும் வீட்டு வாடகை வருமானம் உட்பட சந்ததென்ன சுற்றாடல் வலயத்தில் நடாத்திச் செல்லல் திணைக்களத்தின் விடயப் எல்லைக்கு வெளியே உள்ள செயல்பாடுகள் என்பதால், தற்போதுள்ள முறைகைளை சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	வணிக முன்பணக் கணக்கிற்குரிய வருமானம் சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	05 சொத்து வகைகளுக்கு உரிய திணைக்களத்தால் அடையாளம் காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 25,148,475,775 ஆக இருந்த போதிலும், நிதி அல்லாத சொத்துக்களின் கூற்றில் (ஏசீஏ 06) அது ரூபா 30,653,168,552 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், நிதி அல்லாத சொத்துக்களில் ரூபா 5,504,692,777 வேறுபாடு காணப்பட்டது.	2024 ஆம் ஆண்டில் முன்னைய வேறுபாட்டைக் குறைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதாகவும் மேலும் எதிர்காலத்தில் தற்போதுள்ள வேறுபாட்டைக் குறைக்க எதிர்காலத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும்.	திணைக்கள புத்தகங்களுக்கும் திறைசேரி புத்தகங்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை சரிசெய்யவும், சரியான மீதிகளைக் நிதிக் கூற்றுககளில் காட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii)	1125 கட்டிடங்கள் மற்றும் நிர்மபணப் பொருட்கள், 24 போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் 341 காணிகள் அடங்கிய 1490 நிதியல்லாத சொத்துக்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள் பெறப்பட்டவுடன் அப்பெறுமதியை எதிர்காலத்தில் கணக்கீடு செய்வதாக.	விரைவான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டு சொத்துக்களை துல்லியமாக மதிப்பிட்டு உடனடியாக் கணக்கீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வருமான மதிப்பீடு சரியாகவும் நடைமுறை சாத்தியமாகும் தயாரிக்காததன் காரணமாக மீளாண்டின் போது ரூபா. 800,000,000	இறுதி சில மாதங்களுக்காக எதிர்பாராத வகையில் வருமானம் உயர்வடைந்தமை மற்றும் இரண்டாவது முறை வருமான	அடுத்த ஆண்டுக்குரிய வருமானம் நேர்த்தியாகவும் சரியாகவும் எதிர்வு

இற்கு தயாரிக்கப்பட்ட வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 750,000,000 என திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் ரூபா. 926,148,764 ஆன வருமானம் சேகரிக்கப்பட்டு இருந்தது. ஆரம்ப மதிப்பீட்டு வருமானத்தை விட 116 சதவீதம் மற்றும் திருத்திய வருமானத்தை விட 124 சதவீதம் உழைக்கப்பட்டு இருந்ததால் வருமானம் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை.	திருத்தத்திற்கு சந்தர்ப்பம் இல்லாமையால் வருமானத்துக்கு ஏற்ற வகையில் வருமான மதிப்பீடு திருத்தம் செய்வதற்கு முடியாமல் இருந்ததாக.	கூற வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

(அ) நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	செலவின மதிப்பீடு தயாரிக்கும் போது சில விடய விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டமை காரணமாக 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 02 செலவின விடயங்கள் என மொத்தம் ரூபா 88,700,000 ஆன நிதி ஏற்பாடு நிபி 66 மூலம் ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்ததுடன் அதில் 24 சதவீதம் முதல் 97 வரையான வீச்சில் இருந்தன.	அரச செலவினத்தை கட்டுப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தமை மற்றும் பாதீட்டு திணைக்களத்தின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்தமை தொடர்பாக வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பேரில் செய்யப்பட்டமை காரணமாக நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக	முடியுமானவரை சரியாக செலவினம் மதிப்பீடு செய்யப்பட வேண்டும
(ii)	மீளாய்வாண்டின் நிகழ்ச்சி திட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 539,160,000 ஆன தேறிய மீண்டெழும் ஏற்பாட்டிற்கு இடையே ரூபா. 175,961,422 அல்லது தேறிய ஏற்பாட்டில் 32.6 சதவீதம் அளவில் சேமிக்கப்பட்டு இருந்தன.	திறைசேரி செயலாளரின் இலக்க BD/CBP/01/01/01-2024 மற்றும் 2024.01.10 திகதி தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 01/2024, இலக்கம் BD/CBP/01/01/05-2023 மற்றும் 2023.12.29 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டமை இதற்கான காரணங்களாக இருந்ததாக	மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படுவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை உயர்ந்த அளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

(iii)	மீளாய்வாண்டில் நிகழ்ச்சி திட்டம் 01 மற்றும் 02 இன் கீழ் வேறுபடுத்தப்படடிருந்த ரூபா. 630,830,000 ஆன தேறிய நிதி ஏற்பாடுகளுக்கு இடையே ரூபா. 196,679,333 அதாவது தேறிய நிதி ஏற்பாட்டின் 31 அளவில் சேமிக்கப்பட்டு இருந்தன.	பாதீட்டு சுற்றறிக்கை 01/2023 அறிவுறுத்தல்கள் பிரகாரம் சிக்கனமாக அதிக கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செலவினங்கள் மேற்கொண்ட காரணத்தினால் மிகை ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக.	மதிப்பீடு சரியாக தயாரிப்பதற்கும் ஒதுக்கீட்டு ஏற்பாட்டை முழுமையான வகையிலும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான குறிப்பு (iv) இன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்பு மீதி ரூபா. 11,808,310 ஆக இருந்த போதும் திறைசேரியில் அச்சிட்டு SA 92 இன் பிரகாரம் அம்மீதி ரூபா. 97,546,807 ஆக இருந்த போதும் திறைசேரிக்கு அறிக்கையிடப்படாத 61 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா. 614,462 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு இருந்தது.	தலைமை அலுவலகத்திற்கு வெளியே ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற பட்டியல் தாமதமாக கிடைத்தமை காரணமாக நி.பி 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டதாக.	கடப்பாடுகள் முறையாக அறிக்கையிடப்படாமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக திறைச்சேரிக்கு அறிக்கை இட்ட பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	திறைச்சேரிக்கு அறிக்கையிடப்படாத எந்த ஒரு கடப்பாடும் அல்லது பொறுப்பொன்று முன்னைய ஆண்டின் செலவினம் ஒன்றாக 2025 ஆம் ஆண்டில் தீர்வு செய்யக்கூடாத போதிலும் திறைசேரி கணினி அச்சிடு (SA 92) கடப்பாடு மற்றும் பொறுப்பு கூற்றில் உள்ளடங்காக மீளாய்வாண்டிக்கான ரூபா. 4,629,683 ஆன பொறுப்புகள் 2025 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	தலைமை அலுவலகத்திற்கு வெளியே ஏனைய நிறுவனங்களிலிருந்து கிடைக்கின்ற பட்டியல் தாமதமாக கிடைத்தமை காரணமாக நி.பி 115 இன் பிரகாரம் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டதாக.	கடப்பாடுகள் முறையாக அறிக்கையிடப்படாமை தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக திறைசேரிக்கு அறிக்கை இட்ட பின்னர் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(இ)	நி.பி 94 (1) இற்கு இணங்காத முறையில் இரண்டு செலவு விடயங்களுக்கான ஏற்பாடு மிகைத்து ரூபா 2,421,050 ஆன கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.	நீர் மின்சாரம் மற்றும் தொலைபேசி பட்டியல்கள் தடையின்றி மேற்கொள்வது அத்தியாவசியமாக இருப்பதால், இக்கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் நி.பி 94 (1) இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக.	எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை தவிர்ப்பதற்கு வேலைத் திட்டமொன்றை ஈடுபடுத்தி நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

	கணக்காய்வு அவதானிப்பு				பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் உடனான தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணக்கமின்மை**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	
(அ)	1980 இன் 37 ஆம் இலக்க பீடை கொல்லிகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 1655/7 ஆம் இலக்க 2010 மே 25 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி.	-	தெரிவு பரிசோதனையின் போது வெளிப் படுத்தப்பட்ட பிரகாரம் கணக்காய்வு திகதியான 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி அளவில் ஐந்து வியாபார நிலையங்களில் 2024 ஆம் ஆண்டுக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய வருடாந்த அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளாமல் விற்பனை நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.	கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை.	உரிய வியாபார நிலையங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய சட்டம் மற்றும் வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் வியாபார நிலையங்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவையில் XII ஆம் அத்தியாயத்தின் 22 ஆம் பிரிவு	2,583,180	விவசாய திணைக்களத்திற்குரிய அனுராதபுர பண்ணை ஆராய்ச்சி நிலையத்தின் இயந்திர பொறியியாளரால் அங்கீகரிக்கப்படாத 85½ விடுமுறை தினங்கள் உட்பட 2023	2023 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளமற்ற விடுமுறைகளை அங்கீகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு	தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

ஜனவரி முதல் 2024 ஜூலை 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் 175 விடுமுறைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் தொடர்ச்சியாக சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டு வந்தது.	வருவதாக.

3.5 மோசடித் தனமையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அநுராதபுரம் ஸ்ரீ மகா போதியின் உடமலுவ பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 03 கட்டத்தின் கீழ் ரூபா 45,202,964 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உள்ளூர் சிற்றுண்டிச்சாலையின் ஒரு கட்டத்தில் செலுத்தப்பட்டிருந்த வேலை பகுதி போலியாக மீண்டும் மதிப்பீடு செய்து கொடுப்பனவ் செய்தமை பௌதீக ரீதியாக இருப்பதை விட கூடுதலான அளவிற்கு அளவீடு செய்து கொடுப்பனவு செய்தமை மற்றும் போலியாக நிறைவேற்றப்படாத செயற்பாடுகளுக்காக கொடுப்பனவு செய்தமை காரணமாக இந்நிர்மாணத்திற்காக ரூபா. 1,824,826 ஆன மிகைக் கொடுப்பனவு இடம்பெற்று இருந்தது.	வெளிப்படுத்தப்பட்டுள்ள மிகை கொடுப்பனவிற்கு ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்குள்ள நிறுத்தி வைத்தல் தொகையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	மிகை கொடுப்பனவு மேற்கொண்ட உத்தியோகத்தர் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் கொடுப்பனவு செய்து மிகை கொடுப்பவர்கள் உரிய தகப்பனரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிதி பிரமாணம் 767 (1) இற்கு இணங்காத வகையில் நில்லம்ப சமூர்த்தி நிலையத்தினால் விவசாயத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்ட 02 குளிர்சான பெட்டிகளுக்குரிய உதிரிப் பாகங்களில் உரிய 04 வழங்கல் கட்டளைகளுக்காக பொது 219 கீழ் பெறுவனவுக் கட்டளைகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த உருப்படி ரூபா. 285,000 ஆன தொகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டு விவசாயத் திணைக்களத்தின் காசுப் பிரிவின் மூலம் 5/2014 மற்றும் 6/2014 ஆம் இலக்க	ந்த உபாகங்கள் 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பழமையாக இருந்ததுடன் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு முடியாததால் அந்த உருப்படிகள் பெறுகை செயற்பாட்டின் நடவடிக்கை செயற்பாடொன்றின் ஊடாக கேள்விதாரருக்கு வழங்கப்பட்டதாக.	நிதி பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

	சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் வெளித்தரப்பினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.		
(இ)	2022 மே முதல் 2023 திசெம்பர் வரையான காலப்பகுதியில் உடரதெல்ல விதை உருளைக்கிழங்கு உற்பத்தி பண்ணையில் சேவை புரிகின்ற ஒப்பந்த தொழிலாளர் ஒருவரால் டீசல், பெட்ரோல் உராய்வு நீக்கி மற்றும் கிரீஸ் கொள்வனவுக்காக தயாரிக்கப்பட்டிருந்த போலி பட்டியல் பயன்படுத்தப்பட்டு ரூபா. 3,127,490 ஆன தொகையை தனியார் எரிபொருள் நிலையம் ஒன்றுக்கு கொடுப்பணவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	போலி பட்டியல் சமர்ப்பித்தமை தொடர்பாக முறையான பரிசோதனை என்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கை ஒன்றை வழங்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக.	உரிய பரிசோதனை நடவடிக்கைகளை விரைவு படுத்தி அரசுக்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக தீர்வு செய்வதற்கும் பொறுப்பான தரப்பினர் தொடர்பாக முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1. திட்டமிடல்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்திக்கு இணங்காத வகையில் விவசாய திணைக்களம் மீளாய்வாண்டிற்குரிய சாதாரண மூலதன மற்றும் விசேட செயற்திட்டங்களுக்காக திருத்திய செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் திருத்திய தொழில்நுட்ப செயல் நடவடிக்கை திட்டம் என்பவற்றை உரிய நேரத்தில் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அவற்றை முறையே 2025 மார்ச் 11 ஆம் திகதி மற்றும் 2025 ஏப்ரல் 09 ஆம் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பித்து இருந்தது.	எதிர்காலத்தில் இது தொடர்பாக முன்னுரிமையாக கவனம் செலுத்தி தாமதம் இன்றி உரிய காலப் பகுதியில் திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் திட்டங்களை தயாரித்து சமர்ப்பிக்கப்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் திட்டங்களை தயாரிப்பதை உறுதிப்படுத்துவதாக வேலை திட்டம் ஒன்று தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தை அடையாமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஆம் ஆண்டு முதல் சோள செய்கையை ஊக்குவிப்பதற்காக 03 செயற்றிட்டங்களின் கீழ் அனுராதபுரம் மாகாணங்களுக்கு இடையேயான வலையத்திற்கு ரூபா. 9,462,220 செலவிடப்பட்டிருந்தாலும், 2024 சிறுபோகத்திற்குள் எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 50 சதவீதத்தை அடைய முடியவில்லை.	சோள சாகுபடி தொடர்பான திட்டம் செயற்படுத்தப்பட்டாலும், சோள விதைகளை இறக்குமதி செய்தல், சோளத்திற்கான உர மானியங்கள் இல்லாமை மற்றும் உரம், இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர்களிற்கான அதிக செலவு காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைதல் கடினமாக காணப்பட்டதாக	திட்டங்களை மேற்பார்வையிட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கான திட்டத்தை வகுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	உப உணவுப் பயிர் உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டில் அனுராதபுரம் மாகாணங்களுக்கு இடையேயான பெரிய வெங்காய விவசாயிகளுக்கு ஊக்கத்தொகையாக ரூபா. 2,661,825 வழங்கப்பட்டது. எனினும் 2023 சிறுபோகத்தில் எதிர்பார்க்கப்பட்ட 700 ஹெக்டெயார் இலக்கில் அடையப்பட்ட இலக்கு 13.2 ஹெக்டயார் மட்டுமேயாகும். இது எதிர்பார்க்கப்பட்ட இலக்கின் மிகக் குறைந்த வீதமான 1.8 சதவீதமாகும்.	உப உணவுப் பயிர்களுக்கு மானியங்கள் இல்லாமை, அறுவடைக்கு சரியான விலை கிடைக்காமை, எதிர்பாராத வரண்ட வானிலை மற்றும் அரசாங்கம் பெரிய வெங்காயத்தை இறக்குமதி செய்தமையால் விவசாயிகள் பெரிய வெங்காய செய்கையிலிருந்து விலகியமை போன்ற காரணங்களால் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை என்பதாக.	- அதே -
(இ)	குண்டசாலை அரசு விதை உற்பத்தி பண்ணையில் கடந்த 04 பருவங்களில் எதிர்பார்க்கப்பட்ட மொத்த விதை உற்பத்தி 10,530 கிலோவாக இருந்தபோதிலும், ரூபா. 20,706,591 செலவில் 2,717 கிலோ விதைகள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இது எதிர்பார்க்கப்பட்ட இலக்கில் 25 சதவீத மிகக் குறைந்த மட்டமாகும்	பாதகமான வானிலை மற்றும் போதுமான மனித வளங்கள் இல்லாமையால் உற்பத்தி இலக்குகளை அடைய முடியவில்லை என்பதாக.	- அதே -

(ஈ)	விவசாயத் திணைக்களத்தின் சீதா எலியா விதை உருளைக்கிழங்கு பண்ணை 2022 மற்றும் 2024 சிறுபோக பருவங்களில் முறையே 63 சதவீதம் மற்றும் 59 சதவீதம் எதிர்பார்த்த விதை விளைச்சலை அடையத் தவறியிருந்தது.	நாட்டில் எரிபொருள் பற்றாக்குறை, வறண்ட வானிலை மற்றும் சூறாவளி நிலைமைகள் காரணமாக, எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைய முடியவில்லை என்பதாக.	- அதே -
(உ)	பெல்வெஹெர பிரதிப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம் 2024 சிறுபோக பருவத்திற்கான ஒப்பந்த விதை திட்டத்தின் கீழ் 03 வகையான பயிர்களில் 33620 கிலோ விதைகளைப் பெறல் எனும் இலக்கில் 21320 கிலோகிராம் எனும் 63 சதவீத அளவினைப் பெறத் தவறியிருந்தது.	நிலவும் சந்தை நிலைமைகள் மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகள் காரணமாக முன்னேற்றம் குறைந்த நிலையில் காணப்படுகின்றதாக.	- அதே -
(ஊ)	மீபிலிமான அரசு விதை உருளைக்கிழங்கு உற்பத்தி பண்ணையில் 2023 சிறுபோக பருவத்தின் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி 2021 சிறுபோக பருவத்துடன் ஒப்பிடும்போது 50 சதவீதம் குறைவடைந்துள்ளதுடன் 2023/2024 பெரும் போக பருவத்தின் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி 2021/2022 பெரும் போக பருவத்துடன் ஒப்பிடும்போது 43 சதவீதம் குறைவடைந்துள்ளது.	சாகுபடி பரப்பளவு குறைதல், பாதகமான வானிலை மற்றும் பூச்சி மற்றும் விலங்கு அச்சுறுத்தல்கள் காரணமாக விதை உற்பத்தி குறைவாகவே காணப் பட்டதாக.	- அதே -

4.3 எதிர்பார்த்த விளைவுகளை (Outcome) அடையத் தவறியமை

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	அனுராதபுர விவசாய இயந்திர பயிற்சி மைய வளாகத்தில் ரூபா. 13,315,979 செலவில் ஒரு Ones stop கடை மற்றும் விவசாய உபகரணங்கள் வாடகை மையம் என்பன முறையான பொறியியல் திட்டம் மற்றும் சாத்தியக்கூறு ஆய்வுகள் இன்றி கட்டப்பட்டதுடன் ரூபா. 11,732,900 செலவில் இதற்கான விவசாய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும்	வாடகை அடிப்படையில் விவசாய உபகரணங்களை வழங்குவதற்கான முறையான திட்டமெதுவும் காணப்படவில்லை என்பதுடன், குறித்த விவசாய உபகரணங்கள்செயற்றிட்ட பயிற்சி திட்டங்கள் மற்றும் முன்னோடி விளக்க நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டாலும், COVID-19 பரவல் மற்றும் எரிபொருள்	சொத்துக்களை முழுமையாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்காத பொறுப்பான அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும் பயன்படுத்தப்படாத சொத்துக்களிலிருந்து நன்மைகளைப் பெறுவதற்கான

	05 ஆண்டுகளுக்கும் மேலாக அவை பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன. மேலும், படஅத்த விவசாய் தொழில்நுட்ப பூங்காவில் ரூபா. 7,133,153 செலவில் கட்டப்பட்ட Ones stop கடையும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.	பிரச்சினைகள் காரணமாக பயிற்சி வகுப்புகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டன. மேலும் GAP சான்றிதழின் கீழ் பயிரிடப்பட்ட விவசாயிகளின் பொருட்களை விற்பனை செய்வதற்காக படஅத்த விவசாய தொழில்நுட்ப பூங்காவில் கட்டப்பட்ட one stop விற்பனை நிலையத்தில் விற்பனை வாய்ப்புகளை அதிகரிக்க தேவையான முறைமைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.	முறையான திட்டத்தை செயல்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் மையம் 04 பண்ணைகளுக்காக ஒவ்வொன்றும் தலா ரூபா. 2,407,410 பெறுமதியான மொத்தம் ரூபா. 9,629,640 மதிப்புள்ள 04 எரிபொருள் சேமிப்பு தொட்டிகளை கொள்வனவு செய்து 2025 பெப்ரவரி வரை 02 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படாமல் காணப்பட்டது.	கருத்துகள் எதுவும் குறிப்பிடவில்லை	- அதே -
(இ)	மீபிலிமான அரச விதை உருளைக் கிழங்கு உற்பத்தி பண்ணையின் வருமானம், 2021 சிறுபோகப் பருவத்திலிருந்து 2024 சிறுபோகப் பருவம் வரையான 07 பருவங்களில், 03 பருவங்களில் 67 சதவீதம் முதல் 53 சதவீதத்துக்கு இடையிலான அளவில் குறைவடைந்திருந்தது.	நோய்கள், பூச்சிகள், பாதகமான வானிலை மற்றும் மனித வளங்களின் கடுமையான பற்றாக்குறை ஆகியவை பண்ணையில் இந்த சூழ்நிலையை நிர்வகிப்பதில் தடைகளாக காணப்படுகின்றதாக.	எதிர்பார்க்கப்படும் நன்மைகளை அடைய ஒரு முறையான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

4.4 பெறுகைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருள் மையத்தால், குண்டசாலை மற்றும் பெல்வெஹெர விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அலுவலகங்களில் நிறுவப்பட்ட வெப்ப காப்பு அறைகளுக்கான குளிர்பதன உபகரணங்களை பொறுத்துவதற்கான ஒப்பந்தத்த வழங்குவதில் 05 வருட	கட்டிட சேவைகள் பொறியியல் பணிகள் இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய பொறியியல் துறையான குழு C அல்லது குழு EM இன் கீழ் ஒப்பந்தக்காரர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் ஒப்பந்ததாரரிற்கான	முறையற்ற கொள்வனவு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும், எதிர்காலத்தில் வெளிப்படையான முறையில் கொள்வனவு

	அனுபவம் பரிசீலிக்கப்படும் என்று கொள்வனவு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டாலும், அவை தொடர்பில் கவனஞ் செலுத்தாது சேவை அனுபவம் தொடர்பில் போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து, CIDA வகைப்பாட்டின் படி C (கட்டுமானம்) இன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	ஆலோசகராக செயற்படும் பொறியியலாளரின் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள் இந்த திட்டத்திற்கு பொருந்துகின்றன.	நடவடிக்கைகளை செயற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	விதை உற்பத்தி பண்ணைகளுக்கு, ஒன்று ரூபா. 2,407,410 எனும் அடிப்படையில் ரூபா. 9,629,640 பெறுமதியான 04 டீசல் சேமிப்பு தொட்டிகளை 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்காக, ஒரு தொட்டியின் பெறுமதியாக ரூபா. 2,499,750 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த டீசல் சேமிப்பு தொட்டியின் தற்போதைய சந்தை விலை ரூபா. 1,450,000 என்று கணக்காய்வின் போது தெரியவந்தது.	கருத்துரை வழங்கபடவில்லை	கொள்வனவு நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நன்மைகளை உச்ச அளவில் அதிகரிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் ஏதேனும் முறைகேடுகள் இருந்தால், முறையான ஆய்வுக்குப் பின்னர் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	குண்டசாலை மற்றும் பல்வெஹெரவில் அமைந்துள்ள 02 பிரதிப்பணிப்பாளர் அலுவலகங்களில் நிர்மாணிக்கப்பட்ட 02 வெப்ப காப்பு அறைகளுக்குத் தேவையான குளிர் சேமிப்பு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு தலா ரூபா. 15,073,620 செலவிற்காகத் தயாரிக்கப்பட்ட 02 மதிப்பீடுகளற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விலை பகுப்பாய்வுகள் மற்றும் பிற ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இயந்திர கட்டுமானத் துறைக்கு அரசு அங்கீகரித்த BSR விலைகள் தயாரிக்கப்படாததால், இந்தத் துறைக்கு சிறப்பு விலைகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன் HVAC துறையில் மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் கருதப்படும் அனைத்து அளவுகோல்களையும் தரக்கரீதியான அடிப்படைகளைக் கருத்தில் கொண்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதாக.	விலை பகுப்பாய்வுகள் மற்றும் மதிப்பீடுகள் தொடர்பான பிற ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் அவற்றைச் சமர்ப்பிக்காத உத்தியோகத்தர்கள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	கொள்வனவு வழிகாட்டுதல்களின் 3.2 க்கு இணங்க, தேசிய போட்டி ஏல செயன்முறை தேவைப்படும் ஒரு கொள்வனவு நடவடிக்கைக்கு பகரமாக சந்தை விலை பொருத்த முறையைப் பயன்படுத்தி விதை மற்றும் நடுகைப் பொருள் மையம் மற்றும் பிரதிப்பணிப்பாளர் (விதைகள்)	போதுமான கால அவகாசம் இல்லாததால், விலை பொருத்த முறை பயன்படுத்தப்பட்டதுடன், எதிர்காலத்தில் சரியான கொள்வனவு முறை பயன்படுத்தப்படும் என்பதாக.	கொள்வனவு நடவடிக்கையை மேற்கொண்ட அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கவும் இயலுமான வரை திறந்த கொள்வனவு

	அலுவலகம் ஆகியன 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ரூபா. 35,432,358 மதிப்புள்ள 474 சூரிய சக்தி தெரு விளக்குகளை கொள்வனவு செய்து நிறுவியிருந்தன.		அழைப்புகளை மேற்கொண்டு, கொள்வனவின் நோக்கங்களை அடையும் வகையில் செயற்படவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	நிதிப் பிரமாணம் 137(2) ஐ மீறி, விதை மற்றும் நடுகைப் பொருள் மையம் மற்றும் 08 பிரதிப் பணிப்பாளர் (விதை) அலுவலகங்கள் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 337 தெரு விளக்குகளை நிறுவுவதற்கான விவரக் குறிப்புகளை சரிபார்க்காமல் ரூபா 25,652,827 பணத்தை செலுத்தப்பட்டிருந்தன.	தெரு விளக்குகளை உற்பத்தி செய்யும் நாடு நெதர்லாந்து என்பதுடன் விவரக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள “Panel Voltage” மதிப்பு தொடர்புடைய பொறியாளர்களால் சரிபார்க்கப்பட்டுள்ளது. மேலும் உத்தரவாத காலம் மற்றும் பராமரித்தல் தொடர்பில் கட்டண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு ஒப்பந்ததாரருடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக.	விவரக்குறிப்புகளின்படி பெறப்பட்ட பொருட்களின் நிலையை சரிபார்க்காமல் பணம் செலுத்திய அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 224 இன் படி அரசாங்கத் திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகளை அளவீடு செய்து முறையாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற போதிலும் 04 அலகுகளைச் சேர்ந்த 51.92039 ஹெக்டேயர் காணிகளை கையேற்கும் செயற்பாடு நிறைவுசெய்யப் படவில்லை.	நிலங்களை கையகப்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக.	அவற்றை விரைவாக கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	குண்டசாலை அரசாங்க விதை உற்பத்திப் பண்ணையின் பிரிவு D க்கு சொந்தமான சுமார் 1.5 ஏக்கர் நிலம் 1993 முதல் அப்பகுதிவாசிகளால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தாலும், அதைத் தீர்க்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	அங்கீகரிக்கப்படாத நபர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன	அங்கீகரிக்கப்படாத நிலங்களை விரைவாக கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(இ)	பலவெஹெர பிரதிப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்திற்கு 2012 ஆம் ஆண்டு ரூபா. 7,707,544 க்கு கொள்வனவு செய்யப்பட்ட தானியங்கி விதை பொதி இயந்திரம் 2017 வரை 4551 விதை பொட்டலங்களை மட்டுமே பொதி செய்திருந்தது. மேலும் 2017 முதல் 08 ஆண்டுகள் பயன்படுத்தப் படாமல் காணப்பட்டது.	இந்த இயந்திரம் பரவலாகப் பயன்படுத்தப்படாத ஒரு விசேட இயந்திரமாகும். மேலும் இயந்திரத்தின் உள்நாட்டு முகவர் நிறுவனம் எதிர்காலத்தில் பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்படும் என்பதாக.	செயல்படாத மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை சீர்செய்ய வேண்டும் அல்லது பொருத்தமான நடவடிக்கை எடுத்து பயன்படுத்தவோ அல்லது தொடர்ந்தும் பராமரித்தல் பயனுள்ளதாக இல்லாவிட்டால், முறையான நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்தவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
(ஈ)	பல்வெஹெர பிரதிப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்துக்காக 2010 ஆம் ஆண்டு ரூபா. 500,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட விதை உலர்த்தும் இயந்திரம் செயல்படும் நிலையில் இருந்த போதிலும், கடந்த 5 ஆண்டுகளாக செயற்படாது காணப்படுகின்றது.	இந்த இயந்திரம் தொடர்பான இயந்திர பொறியியலாளர்களின் பரிந்துரைகளைப் பெற்று அதனூடாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக.	- மேற்படி -
(உ)	பல்வெஹெரவில் உள்ள பிரதிப் பணிப்பாளர் (விதை) அலுவலகத்திற்காக 2015 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 1,910,699 பெறுமதியான குளிர்பதன சேமிப்பு வசதி, அதற்காக கட்டப்பட்ட கட்டிடங்களுடன், ஒரு வருடத்திற்கும் மேலாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.	குறைபாடுகளை சரிசெய்வ தற்காக இயந்திர பொறியாளரின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னர் குளிர்பதன சேமிப்பு வசதியின் பழுதுபார்ப்பு தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதாக.	- மேற்படி
(ஊ)	மீபிலிமான அரசு விதை உருளைக்கிழங்கு உற்பத்தி பண்ணையின் மின் வேலி பழுதுபார்ப்பதற்காக 2016 ஆம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா. 513,538 மதிப்புள்ள உபகரணங்கள் 08 ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் இருந்தன.	அவசர காலங்களில் பொது மற்றும் உள்நாட்டு சந்தைகளில் அவை எளிதில் கிடைக்காததால், அவை கொள்வனவு செய்யப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளதாக.	- மேற்படி

4.6 இழப்புகள் மற்றும் சேதங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப் பிரமாணம் 104 பிரகாரம் விசாரணைகள் நிறைவு பெறாத 1976 முதல் காணப்படும் மதிப்பிடப்பட்ட ரூபா. 110,622,350 மதிப்புள்ள 389 இழப்புகள் மற்றும் சேதங்கள் நிதிக் கூற்றுக்ககளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட துணை ஆவணங்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி 432 இழப்புக்கள் மற்றும் சேதங்கள் காணப்பட்டன.	சொத்து முகாமைத்துவ கிளைக்கு தெரிவிக்கப்பட்ட இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு மேலதிகமாக, பொருட்கள் கணக்கெடுப்பு மூலம் அடையாளம் காணப்பட்ட கோப்புகள் காணப்படுவதால் குறித்த விடயங்களில் முரண்பாடுகள் காணப்படுகின்றன என்பதாக	நிதிப் பிரமான விதிமுறைகளின்படி, இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் விசாரணை அறிக்கைகளை நிறைவுசெய்யாத அதிகாரிகள் மீது முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	மாதிரி ஆய்வின் பிரகாரம், நிதிப் பிரமாணம் 104 (3) இன் கீழ் விசாரணைகளின் நீண்டகால தாமதம் காரணமாக, 29 சம்பவங்களுடன் தொடர்புடைய மொத்தம் ரூபா. 5,779,244 பெறுமதியான இழப்பு மற்றும் சேத சம்பவங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படவில்லை.	2024.12.31 ஆந் திகதியில் சொத்து முகாமைத்துவப் பிரிவுக்கு அறிவிக்கப்பட்ட சம்பவங்கள் நிதிக் கூற்றுக்களில் சேர்க்கப்பட்டுள்ளதாக.	உடனடியாக விசாரணைகளை மேற்கொள்வதன் மூலம் இழப்புகள் மற்றும் சேதங்களை சரியாக நிதிக் கூற்றுக்களில் இணைக்க வேண்டும்.

4.7 நிதி அல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	விவசாயத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் 2024 ஆம் ஆண்டில் நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்காக முறையே ரூபா. 2,308,180 மற்றும் ரூபா. 4,766,862 இனை செலவிட்டிருந்தாலும், தலைமை அலுவலக வளாகத்திற்குள் செயல்படுத்தப்பட்ட ரூபா. 6,896,229 மதிப்புள்ள 04 கட்டுமான ஒப்பந்தங்களுக்கு எந்தப் பணமும் வசூலிக்காமல் நீர் மற்றும் மின்சாரம் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.	ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஒப்பந்ததாரர் நுகர்ந்த நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை பணமாகவோ அல்லது சிட்டை மூலமாகவோ அல்லது தக்கவைக்கப்பட்டுள்ள பணத்தினூடாகவோ வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக.	தொடர்புடைய பெறுமதியைக் கணக்கிட்டு பொறுப்பான தரப்பினரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

4.8 முகாமைத்துவ பலவீனங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2003 இன் 22 ஆம் இலக்க விதை சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தின் செயற்பாடுகளை செயல்படுத்துவதற்காக தேவையான சட்டங்கள் பிரமாணங்கள் வரைவு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் போது சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 06 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் விதை சட்டத்தின் 18.5 பிரிவின் பிரகாரம் உரிய கட்டளை வர்த்தமானியில் வெளியிட்டு செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை கணக்காய்வு திகதியான 2024 திசம்பர் 23 ஆம் திகதி வரை மேற்கொண்டிருக்க வில்லை.	விவசாய அமைச்சின் மூலம் விதை சட்டத்திற்குரிய வரைவு கட்டளை தற்போது கிடைத்திருந்ததுடன் இது தொடர்பாக பிரமாணங்களுக்கான அவதானிப்புகளை தயாரித்து விரைவில் சட்ட வரையுனர் களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	உரிய சட்டத்தின் ஏற்பாடுகளை செயல்படுத்துவதற்கு விரைவில் வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	1980 இல் 33 ஆம் இலக்க பீடை கொல்லி கட்டுப்பாட்டு சட்டத்தின் 19 (1) பிரிவின் பிரகாரம் பீடை கொல்லிகளை மொத்தமாக களஞ்சியப்படுத்தும் செயற்பாட்டிற்காக விசேட களஞ்சியமொன்று தவிர வேறு இடம் ஒன்றில் மொத்தமாக களஞ்சியப்படுத்துதல் எவரேனும் ஒருவரால் மேற்கொள்ளக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்த போதும் வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு கைதவிர்ப்பதற்கு காணப்படும் இருப்புகள் மற்றும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வழக்கு நடவடிக்கைகளுக்காக முன்வைப்பதற்குள்ள இருப்புக்ளை பீடை கொல்லி பதிவாளர் அலுவலக வளாகத்தில் கட்டிடம் அறைகளில் முறையற்ற வகையிலும் ஒழுங்கின்றியும் ஆங்காங்கே குவித்து வைக்கப்பட்டு இருந்தன.	பதிவாளர் அலுவலகத்தில் தற்போது பேணி செல்லப்படுகின்ற களஞ்சியம் தற்காலிக நடவடிக்கை ஒன்றாக மாத்திரம் பேணி செல்வதற்கு நேர்ந்துள்ளதாக.	குறித்த சட்டத்தின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	1980 இன் 33 ஆம் இலக்க பீடைக்கொல்லிகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் 21(2) பிரிவின் பிரகாரம் பீடைகொல்லிகளின் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் உள்ள உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் குறிப்பிடப்பட்டுள்ள	எதிர்காலத்தில் இரு தொடர்பாக கவனம் செலுத்தி புதிய நடைமுறையொன்று தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு வருவது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றதாக	குறித்த சட்டத்தின் நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு நடைமுறையொன்று விரைவில் தயாரிக்கப்படும்

	போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் கம்பனிகளால் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரி பிடை கொல்லி பதிவாளர் அலுவலகத்திற்கு பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டதால் மாதிரி பெற்றுக் கொள்ளும் நடைமுறையில் வெளிப்படைத் தன்மை ஒன்று காணப்படவில்லை.		வேண்டும் என்பதாக
(ஈ)	மீபிலிமான அரசின் விதை உற்பத்தி பண்ணையில் பயன்படுத்துகின்ற 05 உழவு இயந்திரங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா. 918,936 பெறுமதியான 2811 லீட்டர் டீசல் வழங்கப்பட்டிருந்த போதும், அந்த உழவு இயந்திரங்களின் மயிலோ மானி இயங்காமையின் காரணத்தினால் எரிபொருள் பயன்பாட்டின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது	கருத்து தெரிவிக்கவில்லை	விரைவில் மைலோ மானி திருத்தம் செய்யப்பட வேண்டும்

5. மனித வள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ)	திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின உள்ளவரான பதவியணியுடன் ஒப்பிடும்போது 2024 தெசம்பர் 31 ஆம் திகதியில் 2875 உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் காணப்பட்டன. அதற்கு இடையே அங்கீகரிக்கப்பட்ட 1050 சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களில் 476 உத்தியோகத்தர்கள் வெற்றிடங்களாக இருந்தன.	வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக	பதவியணியினர் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கை திருத்தம் செய்வதற்கும் தேவையான வெற்றிடங்களை விரைவில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும்.
(ஆ)	விவசாயத் திணைக்களத்தில் சேவை புரிந்து ஓய்வு பெற்ற 147 உத்தியோகத்தர்களின் ஓய்வூதியச் சம்பள பட்டியல் கோவைகள் முறைமைப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்களால் 01 முதல் 18 ஆண்டு காலம் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணமாக அந்த உத்தியோகத்தர்கள் கணக்காய்வு 2025 ஏப்ரல் 30 ஆம் திகதி	வெவ்வேறு காரணங்கள் பெயரில் முறைமைப்படுத்த முடியாது போன கோவைகள் எஞ்சி காணப்படுவதாகவும் ஓய்வூதிய கொடுப்பனவு தாமதத்தை தவிர்ப்பதற்காக நிறுவன ரீதியான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாகவும்.	ஓய்வூதிய கோவைகளை தாமதமின்றி நாளதுவரையாக்கி உத்தியோகத்தர்களின் ஓய்வூதியத்தை தயாரித்த வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் முறையான பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு ஓய்வூதிய கோவைகளை

	வரையில் ஓய்வூதிய உரித்தினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை.		தயாரிப்பதற்கு தாமதத்திற்கு விடயத்திற்கு பொறுப்பான உத்தியோ கத்தர்களினதும் மேற்பார்வை உத்தியோததர்களினதும் பலவீனங்கள் காரணமாக இருந்தால் உரிய பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்கற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை சோஷலிச குடியரசின் அரச சேவைகள் ஆணைக் குழுவினால் 2022 திசெம்பர் 19 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள அலுவலக வழிகாட்டல் விதி கோவை இலக்கம் 2310/29 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 244 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு அரச உத்தியோகத்தர்களும் இடமாற்றங்களுக்கு உட்பட வேண்டிய போதிலும் 05 ஆண்டுகள் முதல் 28 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் இடமாற்றம் பெற்றுக் கொள்ளாத 145 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தியுள்ளமை விவசாய திணைக்களத்திற்குரிய 06 நிறுவனங்களில் தெரிவு பரிசோதனை பிரகாரம் அவதானிக்கப்பட்டது.	அடுத்த வருட ஆண்டு இடமாற்றத்தின் கீழ் உத்தியோகத்தர்களை இடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக.	வருடாந்த இடமாற்ற நடைமுறை முறைப்படி செயல்படுத்தப்பட வேண்டும்.